செ.வெ.எண்: 145 **பத்திரிகைச் செய்தி** நாள்: 28/2/17

மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் குழந்தைகள் நலன் மற்றும் பாதுகாப்பிற்காக ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராக கொண்டு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு செயல்பட்டு வருகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள் குழந்தைகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை இவ்வலுவலகம் மூலம் செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் குழந்தைகளுக்கு பொது மக்களின் பங்களிப்புடன் கூடிய சேவைகள் கிடைக்கப் பட வேண்டுமென்பதற்காக மாநில அரசு "தமிழ்நாடு இளம் சிறார் மூலதன நிதி" யினை உருவாக்கியுள்ளது.

எனவே குழந்தைகள் நலனில் அக்கரையுள்ள தொண்டுள்ளம் படைத்த கொடையாளர்கள் தன்னார்வ அமைப்புகள் மற்றும் தொழிற்துறை நிறுவனங்கள் கீழ் குறிப்பிட்டுள்ள வங்கி கணக்கில் தங்கள் பங்களிப்புகளை செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, 3-வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகர்கோவில், தொலைபேசி : 04652 – 278980 என்ற முகவரியினை தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| Name | : | THE TAMILNADU JUVENILE JUSTICE FUND |
| Name and Branch of the Bank | : | Indian Overseas Bank Rajarathinam Branch, Chennai |
| Account No. | : | 358001000000671 |
| IFC Code | : | IOBA0003580 |

27-2-17

மாவட்ட ஆட்சித்தலைவர்

கன்னியாகுமரி மாவட்டம்

27/2/17

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

நாகர்கோவில்